தினமலர் 28/02/2017

# குடிநீர் வழங்கும் நீரேற்று நிலையப்பணி: கலெக்டர் ஆய்வு

அரியலூர், பிப். 28-

அரியலூர் அருகே திருமானூரை அடுத்த நதியனூர், வைப்பூர் மற்றும் தா.பழூர், ஜெயங்கொண்டம் ஆகிய பகுதிகளில் நடந்து வரும் குடிநீர் வழங்கும் நீரேற்று நிலையம், நீர் உறிஞ்சி கிணறு மற்றும் நீர்சேகரிப்பு கிணறுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை கலெக்டர் சரவணவேல்ராஜ் ஆய்வு செய்தார்.

அவர் பேசுகையில், பொது மக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் தேவையைபூர்த்தி செய்திடும்வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக பணிகள் நடந்து வருகிறது. இதில், திருமானூர் ஒன்றியம், தா.பழூர் மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய ஒன்றியங்களிலுள்ள கிராமங்களுக்கு 20-க்கும் அதிகமான ஊராட்சிகள் மற்றும் குக்கிராமங்களுக்கு நதியனூர் கொள்ளிடம் ஆற்றில் உள்ள நீர் உறிஞ்சி கிணறு 4.5 மீட்டர் அகலமும், 8 மீட்டர் ஆழமும் கொண்ட கிணற்றிலிருந்து குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 7 லட்சத்து 13 ஆயிரத்து 680 லிட்டர் நாள் ஒன்றிற்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அனைத்து கிராமங்களுக்கும் பொதுமக்களின் அடிப்படை தேவையான நீர் தங்குதடையின்றி வழங்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், குடிநீர் ஆதாரத்தை மேம்படுத்தும் விதத்தில் நீர் உறிஞ்சி கிணற்றில் உள்ள மணலை அகற்றும் பணி நடந்து வருகிறது. பணிகளை துரிதமாக செய்ய குடிநீர் வாடிகால் வாரிய பொறியாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றார்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி, திட்ட அலுவலர் (மகளிர்திட்டம்) கதிரவன், உதவி நிர்வாக பொறியாளர் நாகானந்த், நீர்நிலை ஆய்வாளர் தர்மலிங்கம், உதவி பொறியாளர் சிவசங்கரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.